# வளர்ச்சியடைந்துவரும் நாடுகளில் தொற்றுநோய்ப் பிரச்சினைகள்

விஞ்ஞானம் வளர்ச்சி அடையாத காலத்தில் மக்கள் பற்பல நோய்களுக்கு ஆளாகி உயிர் இழந்தனர். விஞ்ஞானம் வளர்ச்சி அடைந்துள்ள இச்சமயத்திலும் மனிதன் நோயின் காரணமாக உயிர் இழப்பதை நாம் காண்கிறோம். நான் குறிப்பிடுவது தொற்று நோய்களைத்தான். ஒருவரிடமிருந்து இனனொருவரைத் தொற்றிக்கொள்ளும் நோய் தொற்றுநோய் எனப்படுகிறது. விஞ்ஞானத்தின் உதவியால் தொற்றுநோய்கள் ஏற்படக் காரணங்களைக் கண்டறிந்த மனிதன், அவை பரவாமல் தடுப்பதற்கு வழிதெரியாமல் திண்டாடுகிறான்.

மனிதனின் இன்பமான வாழ்க்கைக்குத் தடைக்கல்லாகவும் அவன் உயிரைக் குடிக்கும் கொடிய நோயாகவும் தொற்றுநோய்கள் கருதப்படுகின்றன. காசநோய், மலேரியா, தடுப்பாற்றல் இன்மை நோய், பால்வினை நோய், கண்நோய், மூளைக்காய்ச்சல் போன்றவை வளர்ச்சி அடைந்து வரும் நாடுகள் எதிர்நோக்கும் சில பிரச்சினைகள் ஆகும்.

விண்ணைத்தொடும் அளவுக்குக் கட்டிடங்கள், மக்கள் உல்லாசமாகப் பொழுதைப் போக்குவதற்குக் கேளிக்கை விடுதிகள், திரைப்பட அரங்குகள், கல்வியறிவைப் பெருக்கிக் கொள்வதற்குப் போதிய வசதிகளுடன் பள்ளிக் கூடங்கள், ஓரிடத்தில் இருந்து மற்றோர் இடத்திற்குச் செல்ல வாகன வசதிகள், மருத்துவ வசதிகள், இன்னும் சுகபோகமான வாழ்க்கைக்குத் தேவையான வசதிகளைக் கொண்டவைதாம் வளர்ச்சி அடைந்து வரும் நாடுகள். இப்படிப்பட்ட ஒரு நாடு உருவாக வேண்டும் என்றுதான் வள்ளுவரும்

**“உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்**
**சேரா நியல்வது நாடு”**

என்று தம் குறளில் கூறியுள்ளார்.

மக்களின் நல்வாழ்வில்தான் நாட்டின் வளர்ச்சியே அடங்கியுள்ளது. ஒரு நாட்டின் உற்பத்தித் திறனை உயர்த்துவதற்கு அந்நாட்டில் வாழும் மக்களின் உழைப்பு மிகமிக இன்றியமையாததாகும். அந்நாட்டில் தொற்றுநோய்கள் பரவினால், மக்கள் தொகை குறைந்து உற்பத்தித் திறனும் பாதிக்கப்படும். இதனால், நாட்டில் வறுமை ஏற்படுகிறது. நோயினும் கொடுமையானது வறுமை. அந்த வறுமை ஒரு நாட்டில் ஏற்படுமேயானால், அது அந்த நாட்டின் வளர்ச்சிக்கே முற்றுப்புள்ளி வைத்துவிடும்.

வளர்ச்சியடைந்துவரும் நாடுகளில் ஒன்றாகக் கருதப்படும் சிங்கப்பூர், போதிய பொருள்வளம் கொண்டு மற்ற நாடுகளுக்கிடையே, மிக்க செல்வாக்குடன் திகழும் நாடாகும். சுற்றுப்பயணிகளின் கவனத்தை ஈர்க்கும் சிங்கப்பூர், அவர்களின் வருகையால் பொருளாதார வளர்ச்சி அடைந்து, தனக்கென்று ஒரு தனி இடத்தையே பிடித்துள்ளது.

இத்தனை வளர்ச்சியையும் கண்டுள்ள நம் சிங்கை தற்போது பரவி வரும் தொற்றுநோயால் பல பிரச்சினைகளை எதிர்நோக்குகிறது. நான் மேலே குறிப்பிட்டுள்ளது போல் ஆண்டுதோறும் சிங்கப்பூருக்கு வரும் சுற்றுப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டு வருகிறது. இந்த எண்ணிக்கையோடு தொற்று நோய்களின் எண்ணிக்கையும், அதிகரித்தால், வேற்று நாட்டவர்கள் நம் நாட்டிற்கு வர அஞ்சுவார்கள். இதற்குக் காரணம் நோய் நம்மைத்தொற்றிக் கொண்டு விடுமோ என்ற பயம். இதனால், நாடுகளுக்கு இடையே உள்ள நட்புமுறை பாதிக்கப்படுகிறது. இதிலிருந்து தொற்று நோய்கள் நாட்டின் வளர்ச்சிக்குத் தீமையை அளிக்கின்றன என்பது தெள்ளத்தெளிவாக விளங்குகிறது.

தொழுநோய், தடுப்பாற்றல் இன்மை நோய் போன்ற தொற்று நோய்களால் அவதிப்படுபவர்கள் தங்கள் குடும்பத்தினரால் ஒதுக்கப்படுகின்றனர். ஆகவே, இந்நோய்களுக்கு ஆளானவர்களைக் கவனித்துக் கொள்வதற்காகவே அரசாங்கம் பெருமளவில் பணம் செலவு செய்து, தனி மருத்துவமனைகளைக் கட்டவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. அது மட்டுமின்றி, சமூகத்திலிருந்து ஒதுக்கப்பட்ட இவர்கள் பலரின் தூற்றுதலுக்கும் வன்சொல்லுக்கும் ஆளாகின்றனர். ஒரு சிலரே இப்படிப்பட்டவர்களுக்கு உதவி செய்ய முன்வருகிறார்கள்.

தொற்றுநோயால் நாட்டில் அமைதியின்மை ஏற்படுகிறது. ஒருவருக்கொருவர் சரளமாய்ப் பேசிக்கொள்ள அஞ்சுவார்கள். வீட்டைவிட்டு வெளியே வரத் தயங்குவார்கள். நாட்டில் பரவியுள்ள கொடியநோய் தங்களுக்கும் வந்துவிடுமோ என்ற பயத்திலேயே மக்கள் வாழ்ந்து வருவார்கள். பயந்து வாழ்பவர்களினால் நாட்டிற்கு என்ன நன்மை? இதனால் நாட்டின் வளர்ச்சிதான் பாதிக்கப்படும்.

பெற்றோர்களுக்குத் தொற்றுநோய் இருப்பதால் அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் உடல் ஊனமுற்றவர்களாய்ப் பிறப்பார்கள் என்பது விஞ்ஞானம் கண்டறிந்த உண்மை. இதனால், அக்குழந்தைகளின் எதிர்காலம் பாதிக்கப்படுகிறது. அரசாங்கத்திற்குப் பலவகையிலும் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. காரணம், வளர்ந்துவரும் இளம் தலைமுறையினரின் நல்வாழ்வு, வளர்ந்துவரும் நாடுகளுக்கு மிக அவசியம். இன்னும் தெளிவாகக் கூறப்போனால், ஊனமுற்றவர்கள் நாட்டின் வளர்ச்சிக்குச் செய்யக்கூடிய உதவிகள் மிகக் குறைவு. அவர்கள் நாட்டிற்குப் பாரமாகி விடுவார்கள்.

தொற்றுநோய்கள் மிகவும் ஆபத்தானவை. அவற்றை மேன்மேலும் பரவவிடாமல் தடுப்பதே சாலச்சிறந்தது. மக்களும் தொற்றுநோய்களால் ஏற்படும் தீமைகளைக் கருத்திற்கொண்டு அவற்றைத் தடுப்பதற்கு ஆவன செய்ய வேண்டும். சுற்றுப் புறங்களையும் நாட்டையும் தூய்மையாக வைத்துக் கொண்டால் மலேரியா, காசநோய் போன்ற நோய்களைத் தடுக்கலாம். “சுத்தம் சுகம் தரும்”, என்ற பழமொழியை நாம் மறந்துவிடக் கூடாது. அத்தோடு, நம் நாட்டின் அழகு குன்றாமல் இருந்தால், சுற்றுப் பயணிகளின் வருகையும் குறையாமல் இருக்கும். நாடடின் பொருளாதாரமும் மேன்மை அடையும்.

சமுதாயத்தில் தொற்றுநோய்களில் சிக்கி அவதிப்படுவர்களை அலட்சியம் செய்யாமல் அவர்களுக்கு உதவ முன் வர வேண்டும். அரசாங்கமும் தொற்று நேய்களினால் ஏற்படும் தீமைகளை மக்களுக்கு எடுத்துக் கூற வேண்டும். முக்கியமாகப் பள்ளி மாணவர்கள் அவற்றின் தீமைகளை அறிந்துகொள்வது நல்லது. ''வெள்ளம் வருமுன்னே அணை கட்ட வேண்டும்,'' என்பதுபோல், பின்னால் துன்பப்படுவதைவிட, முன்பே தெரிந்துகொண்டு நோய் வராமல் தடுப்பது சிறந்தது அல்லவா? ''நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்'' என்னும் பழமொழிக்கேற்ப, நோய் இல்லாமல் வாழ்பவனின் வாழ்க்கையில்தான் இன்பம் நிறைந்திருக்கும். இதை மனத்திற்கொண்டு வாழ்வோமானால், நம்மைப் பாதுகாத்துக் கொள்வதோடு, நாட்டின் வளர்ச்சிக்கும் நம்மால் இயன்றவரை பல நன்மைகளைச் செய்யலாம்.

**வெ.கௌசல்யா**
**புகுமுக வகுப்பு 3 மேல்நிலை (1986)**
**தஞ்சோங் காத்தோங் பெண்கள் பள்ளி.**